**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No:74/2014** நாள் 28.06.2024

பிவாசா.3, திருமதி.நாகஜோதி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை—**

நான் பி.பி.ஏ படித்துள்ளேன். நான் வேலை எதுவும் பார்க்கவில்லை. எனக்கும் 4 வது பிரதிவாதி தனபாலனுக்கும் 2005 ல் திருமணம் நடந்தது. எனது கணவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார் .2021 ல் இறந்துவிட்டார். அவர் இறந்ததால் நானும் எனது குழந்தைகளும் வாரிசுதாரர்களாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் கூடுதல் எதிர் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர் வெம்பக்கோட்டை ஆகிய ஊர்களில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். நான் அவருடன் சேர்ந்து தொழில் செய்யவில்லை. அவர் யார் யார் இடங்களை வாங்கினார் யார் யாருக்கு விற்றார் எந்த எந்த இடங்களை பிளாட் போட்டு விற்றார் என்று எனக்கு தெரியாது என்றால் ஓரளவுக்கு தெரியும். நேரடியாக தெரியாது. என் கணவர் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் நான் படித்து பார்த்துள்ளேன். தாவா சொத்து என்ன என்று தெரியும். தாவா சொத்தை பொறுத்து காசி வள்ளுவனுக்கு 09.04.2010 ல் ஒரு பதிவு செய்யப்பட்ட ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிகொண்டது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். அந்த பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் 30.05.2011 ல் வள்ளுவனும் 1 ம் பிரதிவாதி வீரணனும் சேர்ந்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டார்கள் என்றால் தெரியாது. காசி வள்ளுவனுக்கு எழுதிகொடுத்த பொது அதிகார பத்திரத்தின்ப்படி வள்ளுவன் தாவா சொத்தை பொறுத்து என்ன என்ன நடவடிக்கைகளை எடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் அதற்கான தொகையை அவர் எங்களுக்கு கொடுக்கவில்லை. வள்ளுவன் தொகையை கொடுக்கவேண்டும் என்று

அ.வ.எண் 4/2012 வழக்கு என் கணவர் வள்ளுவன் மீது தாக்கல் செய்திருந்தார். வள்ளுவனும் காசியும் தாவா சொத்தை பொறுத்து எவ்வளவு தொகைக்கு பேசினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது . அ.வ.எண் 4/2012 நான் தரப்பினராக இல்லை. எவ்வளவு தொகைக்காக அந்த வழக்கை என் கணவர் போட்டார் என்றால் தெரியாது . அந்த வழக்கில் என்ன என்ன விவரங்கள் சொல்லப்பட்டிருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.வ.எண் 4/2012 வழக்கு முடிந்துவிட்டது. அந்த வழக்கின் விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது . என் கணவருக்கு சாதகமாகத்தான் தீர்ப்பு ஆகியிருந்தது. இந்த வழக்கின் 1ம் வாதி தர்மராஜ் அ .வ.எண் 4/2012 ல் தரப்பினராக இல்லை என்றால் சரிதான் . நிரூபண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும் .நான் சொல்ல சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது. என் கணவரும் காசியும் ஒரே மாதிரியாக எதிர்கட்சி செய்கிறார்கள் என்றால் சரிதான் . காசி இந்த வழக்கில் என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்று நான் படித்து பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். 21.09.2009 ல் காசியும் எனது கணவரும் சேர்ந்து ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டதாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். அந்த கிரைய ஒப்பந்தம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அந்த கிரைய ஒப்பந்தம் 4 சர்வே எண்களை பொறுத்து ஏற்பட்டிருந்தது. அது பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் கிரைய ஒப்பந்தம் கிடையாது என்றும் வாதியின் உரிமையை பறிப்பதற்காக கிரைய ஒப்பந்தம் இருந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண் 254/2009 சிவகாசி உரிமையியல் நீதிமன்றத்தில் காசி வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியம். காசி அவருடைய பூர்விக சொத்துக்களை குறித்து அந்த வழக்கை போட்டிருந்தார் . யாருக்கு எதிராக போட்டார் என்று தெரியாது. அந்த வழக்கில் காசி பக்கம்

தீர்ப்பாகியது என தெரிந்துகொண்டேன் . அந்த சொத்தில் அவருக்குள்ள உரிமையை கேட்டிருப்பார். காசியும் வள்ளுவனும் ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். காசி டீக்கடை வைத்திருந்தார் . காசி மகன் பட்டாசு கடை வைத்திருந்தார் என்றால் தெரியாது . வள்ளுவன் லாரி செட் வைத்துள்ளார் என்றால் தெரியாது. காசி வள்ளுவனுக்கு என் கணவர் சொல்லித்தான் பவர் பத்திரம் எழுதிகொடுத்தார். வாசாஆ-3 பவர் பத்திரத்தில் எனது கணவர் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரியல்ல . 1வது சாட்சியாக என் கணவர் தான் கையொப்பமிட்டுள்ளார் . வாசாஆ-3 பவர் பத்திரம் என் கணவர் சொல்லித்தான் காசி வள்ளுவனுக்கு எழுதிக்கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காசி எனது உறவினர் இல்லை. வள்ளுவனும் காசியும் உறவினர் என்றால் தெரியாது . வள்ளுவன் எனது கணவருக்கு 9,10,000/- ம் தரவேண்டிய பாக்கி இருந்தது அதில் 2,20,000/-த்தை காசிக்கு கொடுத்துவிட்டு மீதி தொகையை என் கணவருக்கு கொடுக்குமாறு கூறினார் என்றால் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல . காசி வள்ளுவனுக்கோ வள்ளுவன்காசிக்கோ இடையிலிருந்த வரவு செலவு எனக்கு தெரியாது என்றால் சரிதான். நேரடியாக தெரியாது என்றாலும் அதன் விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் . என் கணவர் சொல்லிதெரியும் . 02.09.2009 ல் என் கணவரும் காசியும் கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டதாகவும் அதன் அடிப்படையில் கிரைய தொகை முழுவதையும் என் கணவர் காசிக்கு கொடுத்துவிட்டதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல . தாவா சொத்தை என் கணவருக்கு காசி கிரையம் எழுதிகொடுத்த தேதியில் வள்ளுவனுக்கு எழுதிகொடுத்த பவர் பத்திரத்தை காசி முறையாக ரத்துசெய்யவில்லை என்றால் சரியல்ல . முறையாகத்தான் செய்தார். நோட்டீஸ் அனுப்பித்தான் பவர் பத்திரத்தை ரத்து செய்தார் . பிவாசாஆ-14 தீர்வை ரசீதுகள் 2014 க்கு பின்னிட்டவை என்றால் சரிதான் .அ.வ.எண் 4/2012 ல் 2014 க்கு முன்பு உள்ள தீர்வை ரசீதுகள் தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கு 2014

ஆகஸ்ட் மாதம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான் . முதல் தீர்வை ரசீது ஏப்ரல் 2014 மாதத்திற்குரியது என்றால் சரிதான் . பிவாசாஆ-16 கிரைய ஆவணம் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு காசி வள்ளுவனுக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரம் சட்டப்படி ரத்துசெய்யப்படவில்லை என்றால் சரியல்ல . பிவாசாஆ-16 தாவா சொத்து சம்மந்தப்படவில்லை என்றால் சரிதான் . பிவாசாஆ-17 தாவா சொத்துக்கு சம்மந்தப்படாத ஆவணம் என்றால் சரிதான் . என் கணவரும் காசியும் வஞ்சக கூட்டு சேர்ந்து தான் தாவா சொத்தை பொறுத்து கிரைய ஒப்பந்தம் எழுதிகொண்டார்கள் என்றால் சரியல்ல . காசி என் கணவருக்கு எழுதிகொடுத்த கிரையபத்திரம் சட்டப்படிசெல்லாது என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு . தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.